# முஸ்லிம்களின் திருமணத்தில் சீதனம் - ஓர் இஸ்லாமிய நோக்கு (புல்மோட்டைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் கள ஆய்வு)

**Supervisor**
*Mr. RA. Sarjoon,*
*Lecturer (Prob.),*
*Faculty of Islamic studies &*
*Arabic Language*

**Researcher**
*Miss. M.Y.Jameela,*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies &*
*Arabic Language*

புல்மோட்டைப் பிரதேசத்தில் பெரும்பான்மையாக வாழும் முஸ்லிம்களின் திருமணத்தில் *சீதனக்* கொடுக்கல் வாங்கல்கள் கடந்த சில வருடங்களாக அதிகரித்துக் கொண்டு செல்வதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. புல்மோட்டைப் பிரதேச முஸ்லிம்களின் திருமணத்தில் *சீதன* முறை மூலம் மக்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புல்மோட்டைப்பிரதேச முஸ்லிம்களின் திருமணத்தில் *சீதனத்தின்* போக்கு, *சீதனம்* செல்வாக்குச் செலுத்துவதற்கான காரணங்கள், அது சமூகத்தில் ஏற்படுத்துகின்ற பிரச்சினைகள் போன்றவற்றை இணங்கண்டு, *சீதனத்தின்* போக்கு பற்றி இஸ்லாத்தின் அடிப்படையில் நோக்குவதுடன் அதற்கான ஆலோசனைகளையும் தீர்வுகளையும் முன்மொழிதலே இவ்வாய்வின் நோக்கமாகும்.

இந்நோக்கங்களை அடையும் வகையில் முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டதோடு அளவுசார், பண்புசார் ஆய்வு முறையினூடாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்குத் தேவையான முதலாம் நிலைத்தரவுகளானது நேர்காணல், கலந்துரையாடல், அவதானிப்பு ஆகிய வழிகளில் பெறப்பட்டு Excle மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளானது நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தள ஆக்கங்கள் எனபவற்றின் மூலம் திரட்டப்பட்டன.

இவ்வாய்வின் மூலம் புல்மோட்டைப் பிரதேச முஸ்லிம்களின் திருமணத்தின் போது *சீதனக்* கொடுக்கல் வாங்கல்கள் அதிகரித்து கொண்டு செல்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. *சீதனக்* கொடுக்கல் வாங்கல்கள் அதிகரித்துச் செல்வதற்கான காரணங்களுள் முறையற்ற சொத்துப்பங்கீடு, இறையச்சமின்மை, வறுமை, அந்நிய கலாச்சார தாக்கம், சமூக அந்தஸ்து, கல்வி நிலை விருத்தி, இஸ்லாத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் போன்றன பிரதானமாக உள்ளது. இஸ்லாம் பற்றிய தெளிவின்மை, மக்களிடையே இஸ்லாமிய அமுலாக்கம் போதாமை, இஸ்லாமிய சமூகக் கூட்டுப் பொறுப்பின்மை, இஸ்லாமிய புத்தெழுச்சிவாதக் கருத்துக்கள் புல்மோட்டைப் பிரதேச மக்களை சென்றடைந்தமை போதியதாக அமையாமை, *சீதனம்* பற்றிய இஸ்லாமிய விழிப்புணர்ச்சிகள் அரிதாக மேற்கொள்ளப்பட்டமை, போன்றன *சீதனம்* இப்பிரதேசத்தில் தொடர்ந்திருப்பதற்கு வழிகோலியுள்ளது.

புல்மோட்டைப் பிரதேசத்தில் இடம்பெற்று வரும் 95 வீதமான திருமணங்களில் *சீதனம்* பெறப்படுகிறது. இதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதை அவதானிக்கலாம். குடும்பங்களிடையில் பிளவு ஏற்படல், மனைவி கணவனுக்கு கட்டுப்படாத நிலை, பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்லல், விவாகரத்து

இடம்பெறல், பொருளாதாரப் பிரச்சினைகள், வாரிசுரிமைச் சொத்துக்களை முறையாகப் பங்கிட முடியாமை, இஸ்லாமிய வழிகாட்டல்கள் புறக்கணிக்கப்படல் போன்றன முக்கிய பிரச்சினைகளாக காணப்படுகின்றன. எனவே புல்மோட்டைப் பிரதேசத்தில் *சீதனக்* கொடுக்கல் வாங்கல்கள் அதிகரித்துச் செல்கின்றமை, அதற்கான காரணிகள் அவர்களின் வாழ்வில் ஏற்படுத்தியுள்ள பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு கண்டறியப்பட்டுள்ளது.

எனவே புல்மோட்டைப் பிரதேச முஸ்லிம்களிடம் ***சீ**தனக்* கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், ***சீ**தனம்* தொடர்பான இஸ்லாத்தின் கருத்து நிலைகளை தெளிவுபடுத்துவதற்கும், எதிர்காலத்தில் *சீதனம்* தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வோருக்கும் இவ்வாய்வு பயனுடையதாக அமையும்.

***Key words:*** ***சீதனத்தின்*** செல்வாக்கு, முஸ்லிம், திருமணம்